செ.வெ.எண்: 99 நாள்: 12.02.2020

**<u>திருவிடைமருதூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் நேரில் ஆய்வு</u>**

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூரில் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை இயக்குனர் திரு. பிரதீப் வி பிலிப், உணவு வழங்கல் துறை செயலாளர் திரு.தயானந்தா கட்டாரியா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குனர் திருமதி.சுதாதேவி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ், குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை கண்காணிப்பாளர் திரு.ஸ்டாலின், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தஞ்சாவூர் முதுநிலை மண்டல மேலாளர் திரு. கதிரேசன் ஆகியோர் இன்று(12.02.2020) ஆய்வு நடத்தினர். அப்போது விவசாயிகளிடம் உரியமுறையில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறதா எனவும், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு 24 மணி நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறதா எனவும் விவசாயிகளிடம் கேட்டனர். மேலும், நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயியிடம் கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளின் அளவு குறித்து ஆய்வு செய்தனர்.

ஆய்வுக்குப் பின் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசில் விவசாயிகளுடைய பிரச்சினைகளுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்பட்டு வருகிறது. தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் 12 குழுக்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 12 குழுக்களின் ஆய்வு அறிக்கை குறித்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடைபெற உள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் 389 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், திருவாரூர் மாவட்டத்தில் 458 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 498 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும், பிற மாவட்டங்களில் 310 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 5,40,195 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, சுமார் ஒரு லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். அவர்களின் வங்கிக்கணக்கில் சுமார் 1021 கோடி ரூபாய் மின்னனு பரிமாற்றம் மூலம் வரவு வைக்கப்பட்டுள்ளது. எவ்வித புகாரும் இன்றி விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகளின் தேவைக்கேற்ப கூடுதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.

இவ்வாறு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

---

செய்தி வெளியீடு: செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.